15 மே 2022

Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது**

மாதாந்திர கருப்பொருள்:

**அகில உலக குடும்ப தினம் (மே 15)**

# குடும்பம் - கடவுள் அன்பின் தெய்வீக வெளிப்பாடு

இன்றைய நற்செய்தி வாசகங்கள் யாவும் ஒருங்கிணைந்த ஒரு தொகுப்பைத் தருகின்றன. நற்செய்திய மிக குறுகியதாக இருந்தாலும் அதன் பொருள் நிறைவாக உள்ளது. பாடுகளின் நிகழ்வு வெளிப்படுகையில், இயேசு தம் சீடர்களிடம் மானிடமகன் வழியாக கடவுளும் கடவுளின் வழியாக மானிடமகனும் மாட்சியடைகின்றனர் என்று கூறுகிறார். சிலுவை மரணம் மட்டும், மனிதகுலம் அனைத்திற்காகவும் தன்னலமற்ற தம் வாழ்க்கையின் வழியாக தன்னுயிரைக் கையளித்தார். பாஸ்கா மறைபொருளை தம்முடைய மரணத்தின் வழியாக இயேசு வெளிப்படுத்துகிறார்.



**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

அவரே முதலில் நம்மிடம் அன்பு செலுத்தியதால், நாமும் அன்பு செலுத்துகிறோம்.

(1 யோவான்: 4:19)

“ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்’ என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்.”

இன்று அகில உலக குடும்ப தினத்தைக் கொண்டாடும் இவ்வேளையில் பொன்விதியாக இயேசு கொடுத்த கட்டளையை நாம் நினைவுக்குக்கொண்டுவருவோம். நம்முடைய குடும்பங்கள் கடவுள் அன்பின் தெய்வீக வெளிப்பாடு. தன்னலமற்ற குணத்தை குழந்தைகள் வீட்டிலேயே இரத்த உறவுகளுக்குள்ளேயே அனுபவிக்கவில்லையென்றால் எவ்வாறு அவர்கள் அதனுடைய பொருளைக் கண்டுகொள்வார்கள்?. கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களான நாம், அவர் செய்ததைப் போலவே பிறரை அன்பு செய்யும், அக்கறை காட்டும், தன்னலமின்றி அளிக்கும் அவரின் குணங்களை நாமும் கொண்டிருப்போம். வாழ்க்கையின் சவால்களில் மூழ்கிப்போயிருக்கும் போது துணைவரின் அரவனைப்பு, பள்ளியில் கல்விச் சுமையால் மன அழுத்தத்தில் இருக்கும் குழந்தைக்கு பெற்றோரின் பூரணமான அரவணைப்பு ஆகியவை நாம் இறைவனைப் பின்பற்ற நம்மை இன்னும் நீண்டதூரம் நடத்திச்செல்லும்.

இன்றைய முதல் வாசகத்தில் விண்ணரசில் நுழைய வேண்டுமென்றால் நாம் எவ்வாறான துன்பங்களை அனுபவிக்க வேண்டுமென்று வாசிக்கிறோம். கிறிஸ்துவின் சிலுவையை பகிர்ந்துகொள்வது என்பது முடிவில்லா வாழ்வுக்குரிய நமது பயணத்தில் அவருடைய மாட்சியிலும் பங்குகொள்வதாகும். திருவெளிப்பாட்டு புத்தகத்தில் கடவுள் தம் மக்களின் கண்களில் இருந்து அனைத்து கண்ணீரையும் துடைத்துவிடுவார் என்று யோவான் கூறுகிறார்.

நாம் மற்றுமொரு கிறிஸ்துவாக மாறி, கடவுள் அவரின் அன்பால் நமக்குக் கொடுத்த மாண்பை நம்முடைய குடும்பத்திற்கு நாம் கொடுக்கும்போது கடவுள் அனைத்தையும் நமக்கு அருள்வார்,.கடவுள் நம்மோடு இருக்கிறார் நம்மோடு வாசம் செய்கின்றார். கடவுள் நம்மை அன்பு செய்வதால், நாமும் பிறரை அன்பு செய்யமுடியும். கடவுள் நம்மை மன்னிப்பதால் நாமும் பிறரை மன்னிக்கமுடியும். கடவுள் நம்மீது அக்கறைக் கொள்வதால் நாமும் கவலையின்றி வெளியே செல்லமுடியும்.

இன்று மன்னியாமை உங்களை அன்பு செய்வதிலிருந்து தடுக்கிறது என்றால்,. “தந்தையே, இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை என்று இயேசு சிலுவையில் தொங்கிய வேளையில் தம் தந்தையிடம் மன்றாடிய வார்த்தைகளை நினைத்துப் பாருங்கள். ✤

**இன்றைய வாசகங்கள்:**

திப: 14: 21-27;
திபா: 145 8-13;
திவெ: 21: 1-5;
யோவான்: 13: 31-35.

INTERNAL CIRCULATION ONLY
BUL 20/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org